வளன் ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# புறநானூற்றில் பண்பாடு

**முனைவர் இரா. முரளி கிருட்டினன்**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி.
muralikrishnan_ta2@mail.sjctni.edu

**ஆய்வுச்சுருக்கம்**

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழினத்தின் சிந்தனைக்கொடியில் பூத்த சங்கப் பனுவல்களைக் கொண்ட மொழி தமிழ்மொழி ஆகும். இலக்கியம் தோன்றிய காலந்தொட்டு மக்களின் வாழ்வைச் செம்மைப்படுத்தும் படைப்புகள் வளர்ந்து வருகின்றன. வாழ்க்கையை உணர்ந்துகொள்வதற்கும், உணர்ந்தவர்கள் பிறருக்கு வழிகாட்டுவதற்கும் இலக்கியங்கள் துணைபுரிகின்றன. இப்படித்தான் வாழவேண்டும் என்ற வரையறையுடன் ஒரு மனிதன் வாழ முயற்சிக்கும்போது அவன் வாழ்க்கை மட்டுமின்றி அவனைச் சார்ந்தோரின் வாழ்க்கைநிலையும் பண்பட்டுப் பயனுள்ள நிலையை எய்துகிறது. அப்படிப்பட்ட பண்பாடு உயர்நிலை புறநானூறு எவ்வாறு எடுத்துரைக்கின்றது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கலைச்சொற்கள்**

ஈகை - இரத்தல் - பனுவல் - புரட்சி – பண்பாடு -

**முன்னுரை**

இயற்கையோடு இயைந்திட்ட வளம் பொருந்திய வாழ்க்கையை வாழ்ந்திட்டவன் பண்டைத் தமிழனாவன். பழைய கற்காலத்திற்கும் பின்னர் இயற்கையை வளப்படுத்தி, அதில் பலவிதமான மாற்றங்களையும் கண்டுபிடிப்புகளையும் நிகழ்த்தியவனாக மனிதன் இருந்துள்ளான். ஏனைய உயிர்களைப் போன்று அல்லாமல் குடும்பம் என்னும் அமைப்புடன் செயற்பட்டு அரசு, அரசாட்சி, பொருளாதாரம், சமூக மாற்றம் என மேம்படுத்திக் கொண்டு, தனக்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம் இம்மூன்றையும் ஏற்படுத்திக் கொண்டு,

அறிவுடன் கூடிய அழகியலுடன் வாழ்க்கையை வாழ்ந்து மகிழ்ந்துள்ளான். இத்தகைய வாழ்க்கை முறையினின்று பரிணமித்து வந்த சொல்தான் ‘பண்பாடு’ ஆகும். அனைத்து ஒழுக்கம் சார்ந்த நடப்பியல் கூறுகளைப் பொருளாகத்தரும் பண்பாடு புறநானூற்றில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை எடுத்துரைப்பது கட்டுரையின் நோக்கமாகும்.

**பண்பாடு – விளக்கம்**

பண்பாடு எனும் சொல்லைப் பிரித்தோமானால் பண்+பாடு ஆகும். ‘பண்’ என்பது ‘பக்குவப்படுத்தல்’ என்ற பொருளையும் ‘பாடு’ என்பது ‘குறிப்பறிந்து ஒழுகுதல்’ என்னுத் தலையாயச் சிந்தனையை முன்வைப்பதாக அமைகிறது. பக்குவப்படுத்துதல் மற்றும் குறிப்பறிந்து ஒழுகும் தன்மை இவ்விரண்டும் இப்பூமியில் மக்கள் வாழும் காலம் வரை உளவியல் சார்ந்த கருத்தியலாகவும், ஒழுக்கத்தை நெறிப்படுத்தக்கூடியதாகவும் எக்காலத்திற்கும் பயன்படக்கூடியதாகவும் இடம்பெறுவது இச்சொல்லின் தனித்துவம் ஆகும்.

“உயர்ந்தோர்கள் சமூகத்தில் இன்றியமையாத மக்களாக இருந்துள்ளனர். அவர்கள் மக்களை நெறிப்படுத்திடும் முன்னோடிகளாகவும் வழிகாட்டிகளாகவும் அறத்தை நிலைநிறுத்துபவர்களாகவும், உண்மையை உணரவைப்பவர்களாகவும் இருந்துள்ளனர்.”1 என்பார் க. அன்பழகனார். அவ்வரிசையில் தான் பண்டைய சமூகத்தை நெறிப்படுத்திட்ட புலவர்பெருமக்கள் சான்றோர்கள் இடம்பெறுகின்றனர். ‘மனிதநேய இயல்போடு மனிதத்தைப் போற்றுவோம்’ என்பது பண்பாட்டின் அடிப்படை மனிதவியலாக இருப்பதைக் காணமுடிகின்றது.

**பண்பாட்டின் தோற்றம்**

ஆதிமனிதன் தனக்கு எது தேவையோ அதனைப் பெறுவதில் தன் முனைப்பாக இருந்துள்ளான். அவனுக்கு முதலில் தேவைப்பட்டது உணவாக இருந்துள்ளது. அதனால் “வேட்டையாடிக் கிடைத்த உணவுகளையும் காய்கனி வகைகளையும் பச்சையாக உண்ணத் தொடங்கினார். எதார்த்தமாக நெருப்பில் வெந்துபோன கறியை உண்ட பின்புதான் சற்று சூடாக்கிச் சமைத்து உண்ணும் வழக்கத்திற்கு மாறினான். பின்னர் உணவினை உற்பத்தி செய்ய ஆரம்பித்து, நிலையான இடத்தில் வசிக்கத் தொடங்கி வாழ்ந்திட்டது பண்பாட்டின் முதல் புரட்சியாகும்.”2 என்கிறார் பா. வளர்மதி. இவைதான் பின்னர்,

1. பொருள்சார் பண்பாடு (ஆயவநசயைட ஊரடவரசந)

2. பொருள்சாராப் பண்பாடு ( ழேெ ஆயவநசயைட ஊரடவரசந)

என்ற நிலைப்பாடுகளில் அமைகின்றது.

பொருள்சார் பண்பாட்டில்,

1.தொழிற்கருவி

2.மரப்பொருள்

3.வசதிக்கானப் பொருள்

4.ஆடை அணிகலன்கள்

5.வீடு

6.போக்குவரத்துச் சாதனங்கள்

போன்றவை அடங்கும்.

**பொருள்சாராப் பண்பாடு**

சமூகத்தை நல்வழிப்படுத்த எழுந்த சிந்தனைக்கூறுகள் அனைத்தும் பொருள்சாரப் பண்பாடு ஆகும்.

1.அறிவுத்திறன்

2.சிந்தனைகள்

3.நம்பிக்கைகள்

4.மதிப்பீடுகள்

5.பழக்கவழக்கங்கள்

6.கலை இலக்கியம்

7.வழிபாடு

போன்றவைகள் இதனில் அடங்கும்.

**புறநானூற்றில் பொருள்சாராப் பண்பாடு**

மனிதநேயம், கொடைத்தன்மை, இரக்கநிலை, காதல், போர்த்திறம் போன்ற அனைத்துக் கூறுகளையும் உடையவர்களாகப் பண்டைத் தமிழர்கள் வாழ்ந்துள்ளனர். இவையனைத்தும்

பொருள்சாராப் பண்பாடாகக் கருதப்படக் காரணம் இவையனைத்திலும் பின்பற்றப்பட்டு வந்த அறக்கூறுகள் ஆகும்.

அறப்பண்பு கல்வியின் சிறப்புணர்ந்து கற்பவர்களாக ஒழுக்கநிலையில் உயர்ந்து நிற்பவர்களாக நன்னெறிப்படுத்தும் துணிவுடையவர்களாகச் சிறந்த சமூக வழிகாட்டியாக மாற்றியமைக்கக் கூடியதாக இருந்து வந்திருக்கின்றது. “அகவாழ்க்கை சிறப்புற வேண்டுமெனின் அங்கே புறவாழ்க்கையும் சிறப்புடன் திறம்பட அமைதல் வேண்டும்” என்ற வாழ்வியலை முன்னேடுத்துச் செல்கிறது.

“ஒவ்வொரு மனிதனும் வாழ்வியலில் கடைப்பிடித்திட வேண்டிய நற்பண்புகளைக் கொண்டு சமுதாயத்தில் மதிக்கப்படுவதும், மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் இவற்றைக் கொண்டு பண்பாடுகள் வாழ்க்கையை வலுவூட்டுகின்றன”4 என்பர். இக்கூற்று பண்பாட்டின் சிறப்பினை எடுத்தியம்புவதாகும்.

“அறுகுளத்து உகுத்தும் அகல்வயல் பொழிந்தும்

உறுமிடத்து உதவாது உவர்நிலத்து ஊட்டியும்

வரையா மரபின் மாரிபோலக்

கடாஅ யானை கழற்கால் பேகன்

கொடைமடம் படுதல் அல்லது

படைமடம் படான்பிறர் படைமயக் குறினே”5

என்னும் பாடலில் பண்டைய மன்னர்களும் புலவர்களும் தம்முடைய சிந்தனைத் திறனில் எவ்வளவு உயர்வுடையவர்களாக இருந்துள்ளனர் என்பதைக் காட்டுகிறது. மனித வாழ்வில் இறுதிவரை கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளை எடுத்துக் கூறுவதுடன் எது உயர்ந்தது? மிகவும் உயர்ந்தது எது? என்ற வினாக்களை உணர்வுப்பூர்வமாய் உணரவைக்கக் கூடியதாய் புறநானூற்றுப் பாடல்கள் அமைந்திருப்பது, சிறந்த பண்பட்ட நிலைக்குச் சான்றாக அமைவனவாகும்.

“ஈயென இரத்தல் இழிந்தன்று

ஈயென் என்றல் அதனினும் இழிந்தன்று

கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று

கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று”6

என்பதில் ஈயெனக் கேட்டு இவ்வுலக வாழ்வுதனில் வாழ்ந்திடுதல் இழிவானதாகும். அதனைவிட இழிவானது அவ்வாறு கேட்டு வருபவர்களுக்கு இல்லை எனக் கூறி மறுப்பதாகும். ‘கொள்’ எனக் கொடுப்பது மிகவும் உயர்ந்தது. அவ்வாறு கொடுப்பவர்களிடத்து ‘கொள்ளேன்’ - வேண்டாம்’ எனக் கூறுவது மிகமிக உயர்ந்ததாகும் என்ற பண்பட்ட சிந்தனையை எடுத்துரைப்பது புறநானூற்றின் மிகச் சிறந்த பண்பாட்டு அடையாளமாகும்.

“வறுமையுற்ற காலத்து உதவழ கிடைத்திடாமல் வாழ்க்கையில் துன்புறுவார்க்கு கொடுப்பது ஈகையாகும். மற்றவர்களுக்கு எல்லாம் கொடுப்பது பலனைக் கொடுக்காது. வாங்குபவரின் தன்மையைப் பொருத்து பலனானது அமையும்.”7 என்கிறார் நடராசன். இவை ஈகைக்கு வரையறை என்பதில்லை. இருப்பினும் உடனடியாக யாருக்கு ஈகையளித்தல் வேண்டும் என்பதை புரிய வைக்கும் கூற்றாகும். இதனைத் தான் புறநானூறு,

“பெரிது ஆரார் சிறுசினத்தார்

சில சொல்லான் பல கேள்வியர்

நுண் உணர்வினால் பெரும் கொடையார்

கலுழ்ந்தனையான் தண்தேறலர்

தாழ் உவந்து தழூஉ மொழியர்

பயன் உறுப்புப் பலர்க்கு ஆற்றி

ஏமம் அக இந்நிலம் ஆண்டோர்

சிலேர் பெரும்! கேள் இனி, நாளும்

பலரே தகையஃது அறியா தோர்

அன்னோர் செல்வமும் மன்னி நில்லாது

இன்னும் அற்று, அதன் பண்பே; அதனால்

நிச்சயம் ஒழுக்கம் முட்டிலை பரிசில்”8

என்று தந்துமாறனைச் சங்க வருனர் என்னும் நாகரியர் பாடிய பாடலில் சிறந்த பண்பாட்டு நுணுக்கக் கூறுகளைக் காணமுடிகின்றது. இதற்கு உரைவகுத்திட்ட கு.வெ.பா., “நல்ல பல பண்புகளுடன் இவ்வுலகத்தை ஆண்டார்கள் மிகச்சிலரே. வாழ்வின் பயன்களை அறியதார் மிகப் பலராவர். செல்வம் நிலையற்றது. இரப்போர் கை நிறையுமாறு வழங்குக. வாழ்க்;கையின் இறுதியில் சுடுகாட்டில் அழல் வாய்ப்புகுதல் உறுதி. இதனைக் கண்டு வைத்தும்

பலரும் புகழ் வாய்ந்திலராகவே ஆயினர்”9 என்கிறார். மனித வாழ்க்கையில் பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு. மனிதன் தேடிய செல்வமும் நிலையற்றது. மனிதன் இறந்துபடுவதற்கு முன்பு ஒழுக்கத்துடன் புகழ்பட வாழ்தலே சிறந்த வாழ்வாகும் என்கிறார். இச்சிறப்பு வாய்ந்த பாடல் நிலையாமை தத்துவத்தை எடுத்துரைப்பதும் ஈதலின் தனித்துவத்தையும், ஈதலினால் விளையும் நன்மைகளையும் சிறப்புற முன்வைக்கிறது.

“உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்

அமிழ்த மியைவ தாயினும் இனிதெனத்

தமிய குண்டலு மிலரே முனிவிலர்

துஞ்சலு மிலர்பிற ரஞ்சு வதஞ்சிப்

புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்

உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வின்

தமக்கென முயலா நோன்றாட்

பிறர்க்கென முயலுந ருண்மை யானே”10

இப்பாடல் புலப்படுத்தும் பண்பாட்டு நெறி நன்னெறியாகும். சான்றோர் பெருமக்கள் கிடைத்தற்கரிய அமிழ்தமே கிடைத்தாலும் ‘பெறினும் இனியது’ எனத் தனித்து உண்ணாது, அனைவருடன் பகிர்ந்தளித்து உண்ணும் இயல்பினை உடையவர்கள் என்னும் மேன்மை மிகுச் செயற்பாட்டினை அனைவரும் பின்பற்ற வேண்டும் என் முத்தாய்ப்பாக முன்வைக்கின்றது.

**முடிவுரை**

பண்டைக் காலத்து மக்கள் எந்த ஒன்றையும் நன்கு உற்று நோக்கிடும் ஆற்றல் மிக்கவர்களாகவும், அறத்தின் சார்புடையவர்களாகவும், தனித்தன்மை மிக்கவர்களாகவும் வாழ்ந்திட்டதைப் பண்பாட்டியல் கூறுகளின் அடிப்படையில் ஆராய்ந்தோமானால் புறநானூறு செம்மாந்த நோக்குடன் அதனைப் புலப்படுத்துகின்றது. உலகத்தை இயக்கும் உயிர்ப்பொருளாகச் சூரியன் இருப்பதைப் போன்று, மனித உயிர்களை இயக்கும் சூரியனைப் போன்று புறநானூற்றின் கருத்தாக்கங்கள் உள்ளன என்றால் அது மிகையில்லை.

**சான்றெண் விளக்கம்**

1.கா. அன்பழகன், தமிழர் வாழ்வியல், (கட்டுரை) www.koodal tamil.com/April-2011

2.பா. வளர்மதி, தமிழரின் பண்பாடு, (க)

3.சு.சித்ரா, பதிற்றுப்பத்தில் சேரமன்னர்களின் வரலாறும் வாழ்வியல் செம்மையும், ப.3

4. செ. திருமலை, ஆய்தஎழுத்து (க), ப.66

5.புறநானூறு, பா.எ. 142

6.மேலது, பா.எ.204

7.நடராசன், அருட்பா அருளும் பண்பாட்டுக் கூறுகள் (கட்டுரை) www.koodal tamil.com/April-

8.புறநானூறு, பா.எ.360

9.கு.வெ.பா.(உரை.) புறநானூறு, ப.776

10.புறநானூறு, பா.எ.182

**பார்வைக்குரிய இணையதளங்கள்**

1.www.koodaltamil.com

2.www.openreadingroom.com

3.www.pallavipathipagam.com